لَا إِلٰهَ إِلَّا اللهُ مُحَمَّدٌ رَسُولُ اللهِ إِنَّ الدِّينَ عِنْدَ اللهِ الْإِسْلَامُ

# Friday Sermon

*02 November 2018*
*(23 Safar 1440 AH)*



## "ISLAM & DEATH"

## "இஸ்லாமும், மரணமும்"

(Tamil version - தமிழ் பதிப்பு)

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுதும், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

**இ**ன்று பொது விடுமுறையாகும். ஏனெனில் இன்று புனிதர்கள் தினம். வேறு வார்த்தையால் கூறுகையில், ஒரு கிறிஸ்தவனைப் பொறுத்தவரையில் இந்நாளினில் அவர் பரிசுத்தவான்களையும், இறந்தவர்களையும் நினைவு கூறுகிறான். இன்றைய தினம் இந்த பேருரையை உங்களுக்கு வழங்குவதற்கு அல்லாஹ் எனக்கு வழிகாட்டுகிறான் என்பது ஒரு தற்செயல் நிகழ்வல்ல. (இன்றைய நாளுக்காக ஏற்கெனவே நான் ஒரு பேருரையை தயார் செய்திருந்தேன்) நாம் வாழுகின்ற இந்த உலகம் குறுகிய ஆயுளை கொண்டிருக்கிறது. இன்று அல்லது நாளை மரணம் நம்மை வென்று விடும். நம் உடமைகள், உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைத்தும் நம்மிடமிருந்து மறைந்து விடும். நாம் கொண்டு செல்ல கூடிய பயணமுடிச்சானது ஒன்றேயாகும். அது, நம் செயல்களும் அதன் நோக்கங்களும் ஆகும்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகையில் **"ஒருவர் இறந்து விட்டால் அவரை மூன்று காரியங்கள் பின் தொடர்ந்து செல்லும். அவை அவரது குடும்பம், அவரது செல்வங்கள் மற்றும் அவரது செயல்கள் ஆகும். அம்மூன்றில் அவருடைய குடும்பம், செல்வம் ஆகிய இரண்டும் அவரை விட்டு விலகி செல்கிறது. ஆனால் அவருடைய செயல்கள் மட்டும் அவருடன் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்".**

(புகாரி, முஸ்லீம்)

2000 ஆண்டு ஜுலை 2-ம் தேதியன்று அல்லாஹ்விடமிருந்து பிரஞ்ச் மொழியில் காவிய வடிவில் நான் ஒரு வெளிப்பாட்டை பெற்றிருந்தேன். அது மரணத்தைக் குறித்த வெளிப்பாடு ஆகும். மரணம் உங்கள் கடைசி பயணமாகும்.

**"மரணம் ஒரு பயணமாகிறது**

**எனவே நீங்கள் தயாராகுங்கள்.**

**பயணமுடிச்சுத் தேவையில்லை**

**அல்லது எடுத்து செல்வீர்களானால்,**

**உங்கள் நற்செயல்களையும் அல்லாஹ்வின் அன்பையுமே!**

**இலக்கு, மரணத்திற்கு பிறகான வாழ்க்கை**

**மரணம் என்பது உங்கள் இறுதி பயணமாகிறது".**

இப்பிரிவில், நம்பிக்கையாளர்களின் பயண முடிச்சு அல்லது பயணச் சுமையைக் குறித்து குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அவர் தம் நற்செயல்கள், பக்தி செயல்கள் மற்றும் இறை அன்பினைக் கொண்டு தனது பயணமுடிச்சை நிறைத்துக் கொள்ள வேண்டும். நம்பிக்கையாளர்கள் பாக்கியவான்கள் ஆவார்கள். ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வுக்கு கீழ் படிந்தும் அவனது தூதராகிய முஹம்மது (ஸல்) அவர்களுக்கு கீழ்படிந்தும் இருந்ததோடுமட்டுமல்லாது அல்லாஹ்வால் எல்லாம் காலகட்டங்களிலும் அனுப்பபட்ட தூதர்களுக்கு கீழ்படிந்தும - அதாவது அல்லாஹ் ஒரு தூதரை, ஒரு சீர்திருத்தவாளரை இக்காலகட்டத்தில் அனுப்பி வைத்தால் அத்தூதருக்கு கீழ்படிவதும் ஆகும். அதாவது இந்நூற்றாண்டினைப் போன்று - இவையாவும் அவர்களுக்கு உள் ஒளியாக திகழ்கிறது. அவ்வுள்ளொளி அவர்களை ஒளிரச் செய்கிறது. அவர்களின் மறுமை வாழ்விற்கான பாதையானது, அவநம்பிக்கையாளர்களை ஒப்பிடும் போது எளிதாக அமைகிறது. அல்லாஹ்வினுடைய மற்றும் அவனது தூதருடைய கட்டளைகளைப் புறக்கணித்து விட்டதால் நயவஞ்சகர்களுடைய மற்றும் அவநம்பிக்கையாளருடைய பாதை கடினமாகவும், துன்பம் நிறைந்ததுமாக இருக்கும்.

நயவஞ்சர்கள் மற்றும் அவநம்பிக்கையாளர்களைப் பற்றி அல்லாஹ் திருக்குர்-ஆனில் இவ்வாறு கூறுகிறான் **"நபியே! நிராகரிப்பவர்களுடனும் நயவஞ்சகர்களுடனும் அறப்போர் நிகழ்த்துவீராக. மேலும் அவர்களுக்கு எதிரில் கடுமையாக இருங்கள். அவர்களின் தங்குமிடம் நரகமாகும். அது (தங்குவதற்கு) மிக கெட்டது. (9:73)**

அல்லாஹ்வின் எல்லா நபிமார்களுக்கும் அவர்களை பின்பற்றியவர்களுக்கும், மற்றும் நம்பிக்கையாளர்களுக்கும், அவநம்பிக்கையாளர்களையும், நயவஞ்சர்களையும் எதிர்த்து போராட வேண்டியதாகவேயிருந்தது. அவர்கள் எல்லா நிலையிலும் நபிமார்களுக்கும் நபித் தோழர்களுக்கும் எதிராக குழப்பங்கள் மற்றும் தடையினை ஏற்படுத்தினர். தாங்கள் மனிதர்கள் என்பதனையும் ஒரு நாள் மரணத்திற்குள்ளாக வேண்டும். என்பதனையும் அதோடு மறுமையில் அல்லாஹ்வையும் அவனது கோபத்தையும் எதிர்க் கொள்ள வேண்டுமென்பதனையும் அவர்கள் மறந்து விட்டனர். நயவஞ்சர்களும் உண்மையை மறுப்போர்களும் இறைவனின் கடும் கோபத்திற்க்கு ஆளாக வேண்டியதாக அமையும். ஏனெனில் அவர்கள் ஏக இறைவனுக்கு நிகராக தேவர்களை உருவாக்கியதோடு உண்மை வழியினை தவிர்த்து, தவறான பாதையில் செல்கின்றனர். மட்டுமின்றி இஸ்லாமையும் இறைத் தூதர்களையும் அழிப்பதற்க்காக உண்மையை நிராகரிப்பவர்களை அவர்கள் நண்பர்களாக்கிக் கொண்டனர். அவர்கள் மரணத்தை சந்திப்பதோடு ஒரு பயங்கரமான விதியை எதிர்க் கொள்ள வேண்டுமென்பதை மறந்து விட்டனர்.

சமீபத்தில் நிகழ்ந்த மௌரீஷியஸ் அஹ்மதியா ஜமா அத்தை சார்ந்த ஒரு மருத்துவரின் (Doctor) இறப்பு அதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. 2018 அக்டோபர் 28 – ம் தேதி திங்கட்கிழமை அன்று அன்னார் மரணமடைந்தார். அன்னாரின் மரணமானது அஹ்மதியா ஜமா அத்திற்கு மிக பெரிய ஒரு அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. அவர் அஹ்மதியா முஸ்லீம் அமைப்பின் முன்னாள் அமீர் அவர்களின் மைத்துனர் ஆவார். ஜமா அத்து அமைப்பிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கு இந்த மக்கள் 2000 ஆண்டில் சதிதிட்டங்கள் தீட்டினார்கள். 2000 ஆண்டு டிசம்பர் 25 – ம் தேதியன்று நான் ரோஸ்ரீஸில் இருந்த போது அவர்கள் ஒரு கூட்டத்தை (Meeting) நடத்தினார்கள். அக்கூட்டத்தில் வைத்து அவர்கள் தீட்டிய சதிதிட்டங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் பார்வையில் இருந்தது. இக்குறிய அமீர் அவர்களின் மைத்துனர் (இறந்த மருத்துவர்) அனைத்து வகையான பெரிய பொய்களை பரப்புவதற்கு அவர்களுக்கு துணையாகயிருந்தார். அன்னார் கூறினார் அதாவது மன அழுத்தம்

மற்றும் மனரீதியான நோய்களுக்கான சில சக்தி வாய்ந்த மருந்துகளை அவர் எனக்கு பகிர்துரைத்ததாகவும் இத்தகைய மருந்துகளை உட்கொள்பவர்கள் போதை மருந்துகளை பயன்படுத்துகின்றவர்கள் என்றும் அவர் கூறினார். நான் போதை மருந்து பயன்படுத்துபவர் என்ற தவறான செய்தியை சமூகத்தில் பரப்பிக் கொண்டனர். இத்தகைய போதை மருந்துகளை பயன் படுத்துவதன் விளைவாக பெறும் மாயத் தோற்றங்களைதான் அவர் இறைவெளிப்பாட்டாக கூறி வருகின்றார் என அந்த மருத்துவர் கூறினார்.

அன்னாரும் அத்துடன் ஜமா அத்தைச் சார்ந்த ஒரு பார்மெஸ்டின் (மருந்தாளுனர்) உதவியுடன் எனது உடல் நல கெடுதலைப் பற்றி தவறாக வதந்திகளை பரப்பி என்னுடைய நற்பெயரை அழித்து விட்டனர். மட்டுமின்றி நான் போதை மருந்துகளை பயன்படுத்தி வருகின்றேன் என்றும் அதனால்தான் தனக்கு வெளிப்பாடுகள் கிடைப்பதாக கூறுகின்றார் என்றும் அவர்கள் பிரச்சாரம் செய்தனர். ஆனால் சற்று நாள் முன்பு உலகம் சாட்சியாகயிருந்தது. என்னை புண்படுத்திய அந்த மருந்தாளுனர் உரிமமானது (Licence) சுகாதார அமைச்சகத்தால் ரத்துச் செய்யப்பட்டது. அவர் எனக்கு எதிராக கூறிய வார்த்தையாவது நான் அன்னாரின் மருந்தகத்தில் சென்று மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளைப் பற்றி விசாரித்தேன் என பொய் கூறினார். இப்போது அவர் எவ்வாறு அவமானத்திற்கு ஆளானார் என பாருங்கள். பார்மிஸ்ட் குழுவினரும் மற்றும் A.D.S.U பிரிவினரும் சேர்ந்து அவரது மருந்தகத்தை பரிசோதித்து அவரை விசாரணையும் செய்தனர். பின்னர் அந்த மருந்தாளுனரின் உரிமத்தை ரத்து செய்தனர். நிஸாமே ஜமா அத்தின் மிக பெரிய பாதுகாவலர் என உரிமைக் கோரி வந்த இந்த மருத்துவர், அவர் ஒரு மருத்துவராக இருந்தும் கூட அவரது நேரம் வந்தடைந்த போது அவருக்கு தன்னையே அதிலிருந்து பாதுகாக்க முடியாமல் போனது. மிக பெரிய அளவிலான வலியுடன் அவதிபட்டவாறு அவர் மரணமடைந்தார்.

2018 அக்டோபர் 29 – ம் தேதி திங்கட்கிழமையன்று அஹ்மதியா ஜமா அத்து அதிர்ச்சியடைந்து விட்டது. மறுநாள் மாலை 5 மணிக்கு அன்னாரின் இறுதி சடங்கு நடைபெற்றது. அல்லாஹ் திருக்குர் - ஆனில் கூறியிருப்பது போன்று

குற்றவாளிகளின் தண்டணை, தீங்கிழைப்போர்களின் தண்டனை மிக கடினமாகயிருக்கும். அது இவ்வுலகில் வைத்தானாலும் சரி, நாளை மறுமையில் வைத்தானாலும் சரி குற்றமிழைப்போர்களுக்கான தண்டனை மிக கடினமாகயிருக்கும். உண்மையில் இறந்து போன இந்த நபர் இக்காலகட்டத்தில் தோன்றிய இறை அருட் கொடைகளின் மிக பெரிய பகைவனாகயிருந்தார்.

எவர் ஒருவரும் மரணத்திலிருந்து தப்பிக்க முடியாது என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை. அது எந்த வழியிலும் வரலாம். அது நாம் அனைவருக்கும் விதிக்கப்பட்டுள்ளது. ஒருநாள் அது நம்மை வென்றுவிடும் என்பதே உண்மை. ஆனால் அந்த உண்மைகளை குறிப்பிடும் போது ஒரு நபரின் மரணத்தின் மீது நாம் மகிழ்ச்சியடைகிறோம் என எண்ண கூடாது. மாறாக அதன் அர்த்தம் உண்மையை வெளிப்படுத்துகிறோம் என்பது மட்டும்தான். சில நேரங்களில் அத்தகைய மரணங்கள் மீது அல்லாஹ்வின் அடையாளங்களை காணலாம். குற்றவாளிகளை அல்லாஹ் பிடித்துக் கொண்டால், அவன் அவர்களை மிக சக்தி வாய்ந்த நிலையில் பிடிப்பான். அவர் அரசாங்கத்திற்காக பணியாற்றி வந்த ஒரு மருத்துவர் ஆவார். தனிப்பட்ட முறையில் ஆனாலும் அன்னாரின் வேலை என்பது உயிரை காப்பாற்றுதல் ஆகும். ஆனால் மரணம் நெருங்கிய போது தன்னை காப்பாற்ற அவருக்கே முடியவில்லை.

நிச்சயமாக நமது வாழ்க்கை அல்லாஹ்வின் கரங்களிலாகும். அல்லாஹ்வுக்கும் அவனது கலீ.்.பத்துல்லாஹ்வுக்கும் எதிராக சதி திட்டங்கள் தீட்டுவோர்கள் ஜாக்கிரதையாயிருங்கள் அதைபோலவே பொய் பிரச்சாரங்களை பரப்புவோர்களும், அல்லாஹ்வின் அத்தாட்சிகளைப் பரிகசிப்பவர்களும் கவனமாகயிருங்கள். அல்லாஹ்வின் இயந்திரம் இயங்குகிறது. ஆகவே அதிலிருந்து இத்தகைய குற்றவாளிகள் எவரும் தப்பிக்கமாட்டார்கள். இந்த மக்கள் துன்புறுத்தல் ஆரம்பித்து, பரிகாசங்களை ஆரம்பித்து தற்போது 18 வருடங்கள் தாண்டியது. ஆகவே ஜாக்கிரதையாயிருங்கள்.

**“பயணம் உறுதியாகும்.**

**இலக்கு நித்திமாகும்**

**தயாராகுங்கள், நீங்கள்**

**எந்த நேரமும் எந்த பகுதியும் ஆகட்டும்**

**அது, உங்களை வலுக்கட்டாயமாக**

**பிடிப்பதற்கு தயாராகயுள்ளது".**

பூமியில் நாம் பிறந்த நாளிலிருந்து நிச்சயமாக ஒன்று உறுதியாகும். ஒரு நாள் நிச்சயம் வரபோகிறது என்பது சந்தேகமில்லை. நமது உடலை சடலமாக்கிக் கொண்டு நம் உடலை விட்டுவிட்டு ஆத்மா அதன் படைப்பாளனிடம் திரும்ப செல்லும் என்பதில் மாற்றமில்லை. ஆகவே இறுதி பயணம் நிச்சயமாகும். அல்லாஹ் நம்மிடம் கூறியிருக்கின்றான், ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுவைக்கும். இவ்வுலகம் தற்காலிகமான ஒன்றாகும். அதற்கு பின் நாம் சந்திக்கும் உலகமே நித்தியமானது. மரணத்திற்கு பிறகான இந்த பயணம் ஒவ்வொரு நபருக்கும் வெவ்வேறு ரீதியில் அமைந்திருக்கும்.

ஒவ்வொரு நபருக்கும் அவருடைய பிறப்பு நாள் உண்டு. இன்று தொழில் நுட்ப முன்னேற்றங்கள் காரணமாக எந்த நாளில் தம் குழந்தை பிறக்குமென்பதை குறித்து பெற்றோர்களுக்கு அறிய முடியும். ஏனெனில் இன்று பிறப்பு சிசேரியன் ஆப்ரேஷன் (அறுவை சிகிட்சை) மூலம் நடைபெறுகிறது. மருத்துவர்களை அணுகி வரும் பெற்றோர்களுக்கு தம் குழந்தை பிறக்கும் அந்த குறிப்பான நாளை பற்றி அறிய முடிகிறது. (இத்தகைய பிறப்பு சம்பந்தமான காரியங்களில் சில வேளைகளில் தெய்வீக தலையிடுதல் காரணமாக சில மாற்றங்கள் நிகழலாம்). ஆனால் மரணத்தை குறித்து இவ்வாறு கூற முடியாது. நீண்ட காலம் அவர் உயிரோடு இருக்க மாட்டார் என மருத்துவர் கண்டனம் செய்திருந்தாலும், அந்த நாள் மற்றும் சரியான நேரத்தை குறித்து எவருக்கும் கூற முடியாது. நீதிபதியால் மரண தண்டனைக்கு ஆளாகிய ஒரு குற்றவாளியின் மரணத்தை குறித்து முன் கூட்டியே அறிய முடியும். அல்லது மருத்துவர் மற்றும் குடும்பத்தின் ஒப்புதலுடன் செயற்கை இயந்திரத்தின் துணையுடன் அமைதியாக இறக்க அனுமதிப்பதுண்டு. அதைப் போன்று தற்கொலை. (அல்லாஹ்வின் பார்வையில் மிக மோசமான செயல்) இக்குறிப்பிட்ட சிலவற்றை

தவிர்த்தால் மனிதனின் மரணம் எப்போது நிகழுமென்பதை முன்னாலே அறிய எவருக்கும் இயலாது. அல்லாஹ் கூறுகின்றான்,

“உங்களை நீங்களே தயாரக்குவதே உங்களுக்குச் சிறந்தது

அனுமதி முத்திரை அதற்கு தேவையில்லை

தேவையானது ஒன்றேயாகும்

லா இலாஹா இல்லல்லாஹ்

முஹம்மது ரசூலுல்லாஹ்

நீங்கள் உங்கள் இறைவனிடமே திரும்புவீர்கள்

துவக்கம் வருத்தமளிக்கும்

உடலில் இருந்து ஆத்மாவானது கொய்யப்படுகையில்

துன்பமும் வேதனையும் மேலும் தீவிரிக்கும்

நீங்கள் நன்மையின் விதைகளாகிய இனிமை, அன்பு, நம்பிக்கை இவற்றை விதைத்திருப்பின்

உங்களுக்கு ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்

பலகணி இல்லா பாதுகாப்பான வானூரதியில் நிமிர்ந்து படுத்துக்கொண்டு

கிபிலாவுக்கு நேர் தலைசாய்த்து ஓர் பயணம்

பயணத்தின் இலக்கு: பரலோகம்

மறவாதே இலக்கை நோக்கி தயாராயிரு

நாளும் பொழுதும் உறுதியல்ல

இப்பயணத்தினைக் குறித்த சிந்தையில் வாழு!

எவ்வயதினிலும் அது நம்மைக் கொண்டுச் செல்லலாம்

சொர்க்க ராஜ்யத்தின் வாசலுக்கு முன்னோ?

சாபம் நிறைந்த நரக ராஜ்யத்தின் வாசலுக்கு முன்னோ?

**மானிடமே நீ எவ்வாசலுக்குத்**

**திரும்ப தயாராகுகிறாய்**

**விரைந்து தயாராகுங்கள்**

**உங்கள் இறுதி பயணம் மரணம் என்பதை மறவாதே!"**

இக்காலத்தில் ஒரு மனிதனுக்கு ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு செல்ல பாஸ்ப்போர்ட் தேவையாயிருக்கிறது. ஒரு விஷாவும் தேவை, மட்டுமின்றி அதற்கு முன் நாட்களில் தயாராகி கொண்டால் மட்டும்தான் தனது பயணம் மிக நல்ல முறையில் அமையும். மரணத்தைப் பற்றி கூறினால் ஒரு நம்பிக்கையாளர் அவர் உள்ளத்தால் அல்லாஹ்வை அஞ்சியவாறிருந்தால் நிச்சயமாக அவர் உடலளவிலும் மனதளவிலும் ஆன்மீக அளவிலும் தனது படைப்பாளனிடமான பயணத்திற்காக தயாராக வேண்டும். முதுமையடைந்தவராகட்டும், வாலிபராகட்டும் எந்த நேரமும் மரணம் வரலாம். அது உறுதியாகும். மரணம் என்பது எவருக்கும் ஒரு காலாவதி தேதி அமைக்கப்படுவதில்லை. அல்லாஹ்விடம் நெருக்கமாக இருப்பதில்தான் நாம் அனைவருடையவும் இரட்சிப்பு இருக்கிறது. அல்லாஹ்வின் மீதான பயம் அவனது நபிமார்களுக்கு கீழ்ப்படிதல் அவனது கட்டளைகளுக்கு கட்டுபடுதல் போன்றது நம் ஆத்மிக உயிர் வாழ்வை உறுதிப்படுத்துகிறது. நமது உதடுகளில் சஹாத கூறியவாறு நாம் மரணமடைய வேண்டும். சஹாத என்பது ஆன்மீக உணவு போன்றதாகும். அது ஒரு நம்பிக்கையாளரின் ஆன்மாவை சீரமைக்கிறது. சஹாத கூறியவர் நாம் இறந்தால் அவரது மரண நேரத்தில் அவரை அது அல்லாஹ்விடம் இணைக்கிறது. மட்டுமின்றி அல்லாஹ்வின் இரக்கத்தின் மீது அவருக்கு எதிர்பார்ப்பு இருக்கும். ஒரு நம்பிக்கையாளருக்கு இது பொருந்தும் காரியமாகும். ஆனால் ஒரு அவநம்பிக்கையாளரை பொறுத்த வரையில் இது அவருக்கு பாதகமல்ல. ஏனெனில் தனது வாழ்நாள் முழுவதும் அவர் தனது இறைவனை மாற்றி வைத்தார். ஆனால் மரண வேளையில் அவர் தனது அல்லாஹ்வின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்வார். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில்

ஃபிர்அவ்னின் விவாகாரத்தை போன்று! தனது வாழ்நாள் முழுவதும் தன்னை ஒரு தெய்வமாக அவர் நினைத்தார். மூஸா (அலை) அவர்களை கொடுமைப்படுத்தினார். ஆனால் நீரில் மூழ்கி இறக்கும் நேரத்தில் அவரை மரணம் அச்சுறுத்தியது. அந்நேரம், அந்த இறுதி நேரத்தில் அவர் அல்லாஹ்வை அங்கீகரித்தார். ஆனால் அது மிகவும் தாமதமாகயிருந்தது. அல்லாஹ் கூறுகின்றான்,

**"இஸ்ராயிலின் மக்களை கடலை கடக்க வைத்தோம். ஃபிர் அவனும், அவனுடைய படைகளும் கிழற்சியாளராகவும், வரம்பு மீறுபவார்களாகவும் அவர்களை பின் தொடர்ந்து சென்றனர். மூழ்கி விடும் ஆபத்து அவனுக்கும், அவனுடைய படைகளுக்கும் நேரிட்ட போது அவன் கூறினார். இஸ்ராயிலின் மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்ற அவனையின்றி வேறெதுவும் வணக்கத்திற்குரியதல்லவென்று நான் நம்பிக்கைக் கொள்கின்றேன். நான் கட்டுபட்டு நடப்பவர்களை சேர்ந்தவர்களுள் ஒருவனாக இருக்கின்றேன். (அதற்கு நான் கூறினோம்) நீ முன்னர் கட்டுபடாதவனாய் இருந்திருந்தும் குழப்பம் விளைவிப்போரில் ஒருவனாய் இருந்தும் இப்பொழுது தானா நம்பிக்கைக் கொள்கின்றாய். (10 : 91 - 92)**

நம் ஆத்மா நம்மை விட்டு வேறுபடும் வேளையில் மிக வேதனையாகயிருக்கும். நமது அனைத்து வகைப்பட்ட செயல்களும் அதனை சுற்றி குவிந்திருக்கிறது. நம் நம்பிக்கையின் முன்னேற்றங்கள் அனைத்தும் அங்கிருந்தே வெளிப்படுகிறது. இந்த இறுதி தருணத்தில்தான் எல்லோரும் அவருடைய நம்பிக்கையை பாதுகாக்க வேண்டும். இந்த விலை வாய்ந்த நேரத்தில் சாத்தான் நம் நம்பிக்கையை நம்மிடமிருந்து அகற்றுவதற்கு இயன்ற வரையில் முயற்சி செய்வான். சாத்தானின் இத்தகைய தந்திரங்களிலிருந்து எவரை அல்லாஹ் பாதுகாக்கிறானோ, உண்மையான நம்பிக்கையுடன் எவரை மரணிக்க அல்லாஹ் உதவி புரிகின்றானோ அவர்தான் வெற்றி பெற்றவர்.

முஆத் ஜபல் (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்கிறார். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **"எவர் ஒருவர் மரண நேரத்தில் லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மது**

**ரசூலுல்லாஹ் என கூறியவாறு மரணிக்கின்றோரோ அவரை அல்லாஹ் மன்னிப்பவனாக இருக்கின்றான". (முஸ்னத் அஹ்மது)**

சத்கான் அபீ உமர் விளக்குகிறார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு தோழர் என்னை தெரியப்படுத்தினார். அதாவது இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **"எவர் ஒருவர் தனது இறுதி சுவாசத்தில் லா இலாஹ் இல்லல்லாஹ் என கூறியவாறு மரணமடைகின்றாரோ அவர் சொர்க்கத்தில் நுழைந்தார்." (முஸ்னத் அஹ்மது)**

இந்த தருணத்தை எதிர் கொள்வதற்கு நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். எங்கு நித்தியமாக வாழ முடிகிறது அங்கு நுழைய நாம் ஆயத்தமாகயிருக்க வேண்டும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகனாகிய அப்துல்லாஹ் (ரலி) அவர்களை இறைதூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு அறிவுறுத்துவதாக காணலாம். **"இவ்வுலகில் ஒரு பயணியைப் போன்று நீங்கள் வாழ்ந்து விடுங்கள். அல்லது ஒரு அந்நியனைப் போன்று வாழ்ந்து விடுங்கள்".**

ஒரு பயணியைப் பொறுத்த வரையில், தம் பயணத்தின் போது வெவ்வேறு இன்பங்களை கவனிக்க மாட்டார். ஏனெனில் அவ்வழியானது மிகவும் வேதனையுடையது. அதனால் தனது இலக்கை அடைய அவருக்கு முடியாது. தற்கால மகிழ்சிகளில் வீழ்ந்து அதற்காக நேரத்தை செலவு செய்தால் தனது இலக்கை அடைய முடியாமல் போகும். அதனால்தான் பௌதீகமான ஆசைகளில் மூழ்கி அவர்களின் சரியான இலக்குகளை அடைவதற்கு தடையாகயிருக்கும் உறவுகளை தவிர்க்க இஸ்லாமிய மக்களுக்கு கட்டளை விடுத்திருப்பதும் எச்சரிக்கை விடுத்திருப்பதும்! அவர்கள் மரணத்தை குறித்து அடிக்கடி சிந்திக்க வேண்டும். அவ்வாறேயானால் இவ்வுலக தூண்டுதல்களிலிருந்து பாதுகாப்பை பெற முடியும். இருப்பினும் எவராவது வேதனையால் அவதிபட்டவராகயிருந்தால் அதிலிருந்து தப்பிப்பதற்கு ஒரு வழி முறையாக மரணத்தை விரும்புபவராக கூடாது. இத்தகைய நபர்களும் நாமும் அதாவது மனித குலம்யாவும் இந்த பிரார்த்தனையினை செய்ய வேண்டும்.

"அல்லாஹ்வே! எனது வாழ்க்கை எனக்கு நன்மையாக அமையும் வரையில் நீ என்னை வாழ வைப்பாயாக! மேலும் எப்போது எனக்கு மரணம் நன்றாக அமைகிறதோ அந்நேரத்தில் நீ என்னை மரணம் அடையச் செய்வாயாக! ஆமீன். இப்பிரார்த்தனை முழுமை பெற்றதாகும். ஏனெனில் வாழ்க்கையும் மரணமும் அல்லாஹ்வின் கரங்களிலாகும். அதனால் மிக சிறந்த முறையிலான வாழ்க்கையினை அமைத்து தருபவனாக அல்லாஹ் இருக்கின்றான். அதைப் போன்று மிக சிறந்த முறையில் மரணத்தை அளிப்பவனும் அவன்தான். ஆகவே மிக சிறந்த முறையிலான வாழ்க்கைக்காகவும், நேர் வழிக்காகவும் நம் இறுதி மூச்சு வரையில் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். இவ்வழியில் நாம் தேவையான முயற்சிகளையும் செய்ய வேண்டும். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Translated by:**
*Azim Ahmad (Naib Amir)*
Ph: 7339689239

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
*Amir Kerala South Zone, India*
**Kerala Contact No: 9447001832**

**SIRAJ DEEN SAHIB**
*Amir Tamil Nadu State, India*
**Tamil Nadu Contact No: 7502272774**

**NATIONAL AND INTERNATIONAL**

**MUKARRAM SALEEM SAHIB**
*(Naib Amir Tamil Nadu)*
**Tamil Nadu and National Level**
**Contact No: 8903398355**

**MUKARRAM FAZIL JAMAL SAHIB**
*(Naib Amir Delhi)*
**National and International Level**
**Contact No: 9711237484**
**Blog:** www.sahih-al-islam.blogspot.in

**PUBLISHED BY:**
JAMAAT-UL-SAHIH-AL-ISLAM
KALIYAKKAVILAI BRANCH
(TAMILNADU AND KERALA BORDER)
Ph No: 9789180817, 9171977109